ISSN:2582-9599

# தமிழர் பண்பாடும் கலாச்சாரமும்

**க. ஆறுமுகம்[1], முனைவர் பட்ட ஆய்வாளர்,**

**முனைவர் ந. லெனின்[2], ஆய்வு நெறியாளர்,**

**பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில் நுட்ப நிறுவனம்,**

**வல்லம், தஞ்சாவூர்.**

50

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழர் பண்பாடு – தமிழர் கலாச்சாரம் – விருந்து உபசரித்தல் – செல்வன் வீடு – ஊர் விழா – திருமணம் – தாலி – கல்யாணம் – கார்த்திகை விழா – பெண்கள் உலக்கையால் நெல் குற்றும் முறை – சிறுவர் விளையாட்டு.

**தரவுச் சொற்கள்**

மிடா – பெரிய மண்பானை, கடிபுக்க – கைப்பற்றல், கருங்காழி – கருங்காழ் உலக்கை, புரையோர் – பெரியோர், சான்றோர், அடிசில் – சோறு, சமைத்த உணவு.

**முன்னுரை**

தமிழ் சமூகம் நீண்ட வரலாற்று மரபினைக் கொண்டது. உலகத்தில் வாழுகின்ற மானுட இனங்களுள் தொல் பழமையும், வரலாற்றையும் பண்பாட்டையும் கொண்டிருப்பது தமிழினமாகும். மனித வாழ்க்கையில் பிரிக்க முடியாத பழக்கவழக்கங்கள், வழக்காறுகள், வாய்மொழிப் பாடல்கள், நிகழ்த்துக் கலைகள், வழிபாடுகள், சடங்குகள் முதலியவற்றின் மூலமாகத்தான் மனிதனின் பண்பாட்டு வேர்களைப் பிரித்தறிய முடியும். தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் வாழும் இடங்களில் எல்லாம் தமக்கான பண்பாட்டு அடையாளத்தினைக் காத்து வாழுகின்றனர். மக்களின் பண்பாடு, திருவிழாவில் பின்பற்றப்படும் சடங்குகள், உணவு முறையில் பயன்படுத்தப்படும் சடங்குகள், தமிழரின் வீரத்தினை வெளிப்படுத்தும் மஞ்சு விரட்டில் காணப்படும் சடங்குகள் ஒவ்வொரு சமூகத்திலும் இருந்து வருகின்றன. தமிழன் பண்பாடும் கலாச்சாரமும் என்ற ஆய்வுக் கட்டுரையில் பல்வேறு அரிய தகவல்களை அறிய முற்படுவோம்.

**தமிழர் பண்பாடு**

‘யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா”

என்று பாடிய கணியன் பூங்குன்றனார் உலகத்துக்கே சமத்துவத்தை விதைக்கின்றார்.

வந்தாரை வரவேற்று மகிழ்விக்கும் செய்திகள் வரலாற்றில் பாரி மன்னன் அதியமான், நெடுமானஞ்சி, சடையப்ப வள்ளல் என்று வரலாறு தமிழர்களின் பண்பாட்டை எடுத்தியம்புகின்றன.

**தமிழர் கலாச்சாரம்**

அன்று தொட்டே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய தமிழர்கள் முத்தமிழ் வளர்த்த பெருமைக்குரியவர்கள். சங்கம் வைத்து தமிழ் வளர்த்தவர்கள். இயல், இசை, நாடகம் என ஆய

கலைகள் அறுபத்து நான்கும் தமிழர்களின் கலாச்சாரத்தை பறைசாற்றுகின்றன.

தமிழில் எழுந்த ஒப்பற்ற இசைப் பாடல்கள் தமிழர்களின் இசை ஆர்வத்தை எடுத்து காட்டும் என்றும் பெருமைமிக்க சங்கப் பாடல்கள் ஐம்பெரும் காப்பியங்கள் பதினெண்கீழ் மேல் கணக்கு நூல்கள் பல நூறு இலக்கிய வரலாற்றை கொண்டவை.

**விருந்து உபசரித்தல்**

குறிஞ்சிப்பாட்டு, பத்துப்பாட்டு நூல்களில் ஒன்று இதைப் பாடியவர் கபிலர் இப்பாட்டில் கபிலர் கூறும் இல்லற வாழ்வைப் பற்றிய செய்தியைக் காண்போம்.

**செல்வர் வீடு**

விழாக் காலங்களில் சோறு ஆக்குவது போலச் செல்வர் வீட்டில் மிடா நிறைய சோறு ஆக்கி வைத்திருப்பர். அகலத் திறந்து, கிடக்கின்ற வீட்டின் வாசலில் (முற்றத்தில்) வருபவர்கெல்லாம் நெய்யுடன் கூடிய சோற்றை இடுவார்கள். பிறகு சுற்றத்தாரெல்லாரும் சேர்ந்து உண்டது போக மீதியானவற்றைத் தலைவியுடன் சேர்ந்து இல்லறத் தலைவன் உண்பான். இவ்வாறு விருந்தின் சிறப்பைக் கூறும்போது, வீட்டில் ஆக்கப்படும் சோறு ஊரில் நடைபெறும் விழாக்காலத்தில் ஆக்கப்படுவதுபோல அவ்வீட்டில் மிடா நிறைய சோறு இருக்கும் என்ற உவமையைக் கபிலர் ‘சாறு அயர்ந்தன்ன’ என்ற சொற்றொடரைக் கொண்டு விளக்குவான்.

அப்பொழுது விழாக்காலம் எப்படிக் கொண்டாடப்பட்டது என்பதை முடத்தாமக் கண்ணியார் பாடிய பொருநராற்றுப்படை கூறுவதை காண்போம்.

**ஊர்விழா**

அகன்றுள்ளதும் பெரியதுமான ஊர்களில் வாழ்பவர்கள் பலவிதமான வருமானங்களைக் கொண்டவர்களாக இருப்பார்கள். அவர்கள் ஆண்டுதோறும் விழாக்களை நடத்துவார்கள் அவ்விழா நடைபெறும் காலங்களில் ஆடுவது பாடுவதுமான தொழிலையுடைய பொருநர் எனப்படும் கூத்தர்கள் ஊர் விழாக்களில் கலந்துகொண்டு ஆடிப்பாடி நடித்துக் காட்டுவார்கள். அப்பொழுது ஊரில் உள்ளார் வருபவர்க்கெல்லாம் உண்டு மகிழும் பொருட்டுப் பலவகையான சுவைகளைக் கொண்ட உணவு வகைகளைப் படைத்து வழங்குவார்கள். அதுமட்டும் அன்று, விழா முடிந்த மறுநாளிலும் உணவு வழங்குவார்கள். ஆனால் பொருநர்களோ மறுநாள் தங்காமல் தம் வறுமையை நீக்கும் வள்ளல்களை நாடிச் செல்வார்கள். இக்கருத்தை முடத்தாமக் கண்ணியார்

அறாஅ யாணர் அகன்றலைப் பேரூர்ச்
சாறுகழி வழிநாட் சோறுநசை யுறாது
வேறுபல முன்னிய விரகறி பொருநர் (பொருநற் 1-3)

என்னும் வரிகளில் எடுத்துக்காட்டியுள்ளார். இன்றும் கோயில்களில் திருவிழா முடிந்த மறுநாளில் சோறு வழங்குவது நடைபெறுகிறது. இது பண்டைய விழாவின் எச்சம் எனலாம்.

இல்லறத்தில் விருந்தோம்புதலின் சிறப்பைக் கபிலர் கூறும் பாடல் வரிகள்,

சாறயர்ந் தன்ன மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா வரைநகர் பொற்ப

மலர்த் திறந்த வாயில் பலருணப்
பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில்
வசையில் வான்றிணைப் புரையோர் டும்பொடு
விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னொடு உண்டலும் புரைவது (குறிஞ்சி 201 - 207)

இவ்விருந்தின் சிறப்பினைத்தான் திருவள்ளுவரும்,

இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. (குறள் - 81)

என்றும்

இணைத்துணைத்து என்பதொன்று இல்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். (குறள் - 87)

எனக் கூறியுள்ளார்.

சிலப்பதிகாரத்தில்

அறவோர்க் களித்தலும் அந்தனர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் (கொ – 71-3)

என்று கண்ணகி கூறுவதைக் கொண்டு அறிகின்றோம். ஆனால் இன்றோ விருந்தினரை வரவேற்று உபசரிக்கும் முறை அரிதாகிவிட்டது.[1*]

**திருமணம்**

திருமணம் என்பது ஆணும் பெண்ணும் இணைகின்ற சுப நிகழ்வினைக் குறிப்பதாகும். ‘திரு’ என்பது தெய்வத்தன்மை எனவும் ‘மணம்’ என்பது இணைதல் எனவும் பொருள்படுகின்றது.

**தாலி**

தாலி அணிவதன் பொருள் ஆண் மகனான நான் உன் கழுத்தில் திருமாங்கல்யத்தை அணிவிக்கும் இந்த நேரம் முதல் உன்னை பாதுகாக்கும் காவலனாக இருப்பேன் என உறுதி கூறுவதாக ஏற்கப்பட்டு வருகின்றது. மாங்கல்யத்தில் ஆண்மகன் இடும் முதல் முடிச்சு நீ தெய்வத்திற்கும் மனசாட்சிக்கும் கட்டுப்பட்டவள் என்பதையும், இரண்டாவது முடிச்சு குலப்பெருமையை நீ பாதுகாப்பாய் என்பதையும், மூன்றாம் முடிச்சு குல வாரிசுகளை முன்னின்று காப்பவள் என்பதனையும் உணர்த்துவதாக கூறப்படுகிறது.

**கல்யாணம்**

‘கல்யாணம்’ என்பதற்கு மங்களம் என்று பொருள்.

நாலடியாரில் கல்யாணம் என்பதனை

பல்லார் அறியப் பறை அறைந்து நாள் கேட்டு
கல்யாணம் செய்து கடிபுக்க – மெய்இயல்
காதல் மனையாளும் இல்லாளா என் ஒருவன்

ஏதில் மனையாளை நோக்கு. (நாலடி. 9 : 6)

**கார்த்திகை விழா**

கார்த்திகை விழா தமிழர் கொண்டாடும் விழாக்களில் ஒன்றாகும். சங்க காலம் முதல் இன்றுவரை கொண்டாடப்பட்டு வருகிறது. இதை விளக்கு ஒளி (தீப) விழா என்றும் அழைத்துள்ளனர். கார்த்திகை நாளில் ஊர் மக்கள் தம் வீடு, வாசல், தெரு, வயல்வெளி, குப்பை மேடு, குன்றுகள் தோறும் அகல் விளக்குகளை எரிய வைத்து ஒளியால் அழகுபடுத்தி வைப்பது வழக்கம்.

கார்த்திகை விழாவின் நோக்கமே பிரிந்த தலைவன் ஒன்று சேர வேண்டும் என்பதாகும். சங்ககாலத்தில் குடும்பத் தலைவன் பொருள்தேடும் பொருட்டு வேனில் காலத்தில் சென்று விடுவான் அவன் திரும்பிவரும் காலம் கார்காலமாகிய மழைக் காலமாகும். அப்படித் திரும்பி வருகின்ற காலம்தான் கார்த்திகைத் திங்களாகும். அவ்வாறு திரும்பி வந்தவனைக் கண்ட மகிழ்ச்சியில் அவனுக்கு விருந்து வைத்துச் சிறப்பிப்பான். அப்போது மழைக் காலமாக இருக்கும் வீடெங்கும் விளக்குகள் ஏற்றிவைத்துக் கொண்டாடினர்.

முதல் நாளான நாட்டு கார்த்திகை நாளில் எங்கு நோக்கிலும் வீடுகள் தோறும் விளக்குகள் (அகல்) எரிவதைக் காணலாம். இதைக் கார் நாற்பது என்னும் நூலில் உளள 26-ஆம் பாடல் நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

நலமிகு கார்த்திகை நாட்டவரிட்ட
தலைநாள் விளக்கின் தகைவுடைய வாசிப்
புலமெலாம் பூத்தன தோன்றி

என்பது அப்பாடலில் உள்ள வரிகள்.

'கார்த்திகை விழவின் முதல் நாள் போன்று புதர்கள் தோறும் தோன்றி என்று கூறப்படும் செங்காந்தள் மலர்கள் பூத்துக் காணப்பட்டன' என்பது இதன் பொருள்.[3]

**பெண்கள் உலக்கையால் நெல் குற்றும் முறை**

மனிதன் கல்லிலேதான் பொருள்களைச் செய்யத் தொடங்கினான். இதன் வளர்ச்சிப் பண்பாடே உரல், உலக்கை, ஆட்டுக்கால், அம்மி முதலானவையாகும். தற்காலத்தில் இது வளர்ச்சி அடைந்து இருந்தாலும் ஒரு சில பொருட்களைப் பக்குவப்படுத்துவதற்கு பழமையான இக்கருவிகளே துணை நிற்கின்றன. நெல் முதலானவை குற்ற உரல் தேவைப்படுகிறது. உலக்கையின் துணையினைக் கொண்டே தானியங்கள் குற்றப்பட்டு வருகின்றன. உலக்கை நீண்டதாகவும் அடிப்பகுதி இரும்பால் அமைந்திருக்கம். இது கருங்காழி மரத்தால் ஆனது.

பாசவல் இடித்த கருங்காழ் உலக்கை (குறு. 238)

பண்டைய காலத்தில் நெல்லில் உள்ள உறையினை நீக்கி அதனைச் சமைத்துச் சாப்பிட்டான்.

சங்க இலக்கியத்தில் பெண்கள் நெல் குற்றியதாக குறிப்பு வருகின்றது. இதனை வள்ளைப்பாட்டு என்று அழைக்கின்றனர்.

கொடுநுண் ஓதி மகளிர் ஓக்கிய
கொடிமாண் உலக்கைத் தூண்டு உரல் பாணி (அகம் 9 : 11-12)

சங்க இலக்கியப் பாடல் வழி அறிய முடிகிறது.

"பணைத்தாள் அன்ன பாவடி உரல்" (குறு. 89)

என்ற குறுந்தொகை பாடல் மூலமும் அறிய முடிகின்றது.

பெண்கள் அரிசி குற்றுவதனை

"அடுமகள் முகந்த அளவா வெண்ணெல்
கொடிமாண் உலக்கைப் பரூஉக் குற்று அரிசி
காடிவெள் உலைக் கொளீஇ நிழல்" (குறு. 399 : 1-3)

குறுந்தொகைப் பாடல் விளக்குகிறது.

**சிறுவர் விளையாட்டு**

பனங்குரும்பையைக் கழி நுனியில்
பொருத்தி தேர் என்று கூறி ஓட்டி வருதலை,

பெருமடற் பொண்ணைப் பிணர்த் தோட்டுப் பைங்குரும்பைக்
குடவாய்க் கொடிப்பின்னல் வாங்கி தளரு
பெரு மணித் திந்தேர்க் குறுமக்கள் நாப்பண் (கலி. 83 : 8-10)

என்றும்

குழந்தைகள் நடை பயில உதவும்
நடைவண்டி குறித்து

பொற்கால் புதல்வர் புரவி இன்றி உருட்டும்
முக்கால் சிறுதேர் முன்வழி விலக்கும் (பட்டி. 24-25)

பாடலும் முதன்மைச் சான்றுகளாக உள்ளன.

**முடிவுரை**

பண்டைத் தமிழன் பழமையான பண்பாட்டினையும் சிந்தனை மரபினையும் கொண்டிருந்தான் என்பதற்கு சிவகங்கை மாவட்டத்தில் நடந்த "கீழடி" அகழாய்வு ஒரு சிறந்த சான்றாகும். பழமையான வரலாற்றினையும் புதிய சிந்தனை மரபினையும் கொண்ட வரலாற்றுப் பெட்டகமாக சங்க இலக்கியங்கள் இருப்பதை அறிய முடிகின்றது.

பாவாணர் கூறுவது போல பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம் நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கை முன்னது "அகக்கூறு" பின்னத புறக்கூறு நாகரிகம் சேர்ந்த பண்பாடுண்டு நாகரிகம் இல்லாத பண்பாடுமுண்டு தமிழர் பண்பாடு இவ்விரண்டிலும் மெச்சத்தக்கது. எனவே தமிழையும், அதன் கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தையும் காப்பது நமது கடமை.

**சான்றெண் விளக்கம்**

1. புலவர் முத்து, எத்திராசன், இலக்கியத்தில் வரலாறும் பண்பாடும், பக். 163,164
2. முனைவர் கரு.முருகன், சங்க இலக்கியத் தேன் கூடு, பக். 80,81
3. புலவர் முத்து, எத்திராசன், இலக்கியத்தில் வரலாறும் பண்பாடும், பக்.138, 139

**துணைநூற்பட்டியல்**

1. புலவர் முத்து, எத்திராசன், இலக்கியத்தில் வரலாறும் பண்பாடும், ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், சென்னை – 94, டிசம்பர், 2011 (மு.ப).
2. முனைவர் கரு.முருகன், சங்க இலக்கியத் தேன் கூடு, முத்துநாடு பப்ளிகேஷன் பெருங்குடி, சென்னை – 96.